# கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளி

## கலைவிழா 2017

## கலைவிழா – சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் கீதம்

புலம்பெயர் மண்ணில் வாழ்கின்றோம்
புத்தெழில் பூத்த தமிழ்ச் சிறார் நாம்
எமக்கோர் பண்பும் கலாச்சாரமும்
அமைந்தே அவனியில் வாழ்ந்திடுவோம்

கவுன்சுலோவில் ஒரு கல்விக்கூடம்
அமைத்தவர் உயர்ந்தோர் ஆவாரே
நாமிங்கு ஒன்றுகூடி இன்பமாய்
ஒன்றாய் உயர்வுக்கு உழைப்போமே

முத்தமிழ் மொழியும் கவின்மிகு கலைகளும்
ஒருங்கே ஊட்டும் எம் முத்தமிழ்ப் பள்ளி
அது எங்கள் கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளி
மேன்மையுடன் வளர வாழ்த்துவோமே

ஈழ மண்ணின் நறுமணம் கமழ
உதவிடும் கவுன்சுலோ தமிழ் இசைக்கூடம்
குன்றின் விளக்குப் போல ஒளிர வாழ்த்துவமே
வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே! வாழ்க வாழ்கவே!

இராகம் - திலங்க்
தாளம் - ஆதி
இசை அமைத்தவர் - திரு குற்றாலம் நாகராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளி

கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளியின், சிறப்புக் கலைவிழா நடைபெறும் இவ்வேளையில், நமது முத்தமிழ்ப் பள்ளி பற்றிக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளி ஆசிரியர், பெற்றோர் கூட்டு உழைப்பில் நடைபயின்று வருகிறது. தவணை நாட்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை நமது பள்ளி நடைபெறுகிறது.

இப்பள்ளியில் மழலையர்நிலை தொடக்கம் வளர்தமிழ் 12 வரை தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வளர்தமிழ் பாடநூல்களின் பாடத்திட்டத்தைப் பின்பற்றி வருகிறது. நமது இன அடையாளத்தைக் காட்டும் நமது தாய்மொழியைக் கற்பிக்க வேண்டும் என்பதில் நமது பெற்றோர்கள் ஆர்வம் காடடுகின்றனர்.

தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் மிக அர்ப்பணிப்புடன் தமது கற்பித்தலைச் செய்கின்றனர். காலை, தமிழ்மொழி வகுப்புகள் நடைபெற்று முடிந்தாலும் தமது பொன்னான நேரத்தை தேவையான மாணவர்களுக்கு மேலதிகமாகக் கற்றுக் கொடுப்பதில் மிக அக்கறை செலுத்துகின்றனர் என்பது பாராட்டப்பட வேண்டிய விடயம். தமிழ் இலக்கியமாணி (Bachelor of Tamil Literature) பட்டயக் கற்கைநெறியில் நமது பள்ளி ஆசிரியர்கள் பலர் 1ம் ஆண்டை முடித்து 2ம் ஆண்டுத் தேர்வு எழுத அணியம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆசிரியரின் தமிழ்மொழி வளம் கூடுவதால் மாணவர்கள் நன்மை அடைவர்.

பெற்றோர்களில் சிலரும் பட்டயக் கல்வியை விரும்பிக் கற்கின்றனர். அத்துடன் கேம்பிறிட்சு பொதுத் தராதர, உயர்தர வகுப்புகளிலும் மாணவர்கள் கற்று சிறந்த பெறுபேற்றைப் பெறுகின்றனர். கேம்பிறிட்சு தமிழ்மொழி உயர்தரத் தேர்வுக்குத் தோற்றிய மாணவர்களில் சிலர் உயர்தேர்ச்சி(A*, A, B) தரம் பெற்றதால் பல்கலைக்கழக நுழைவில் மருத்துவக் கல்லூரிக்கும் வேறு பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவு செய்யப்பட வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம். அத்துடன் வளர்தமிழ் 12 வகுப்பு முடித்த மாணவ்ரகள் தமிழ் இலக்கியமாணி(BTL) கற்கைநெறியில் இணைந்து கற்கத் தொடங்கியுள்ளனர் என்பது இளைய தலைமுறையினரின் ஆர்வத்தைக் காட்டுகிறது.

நமது பள்ளியில் பரத நாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், சுரத்தட்டு ஆகிய கலைப்பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தத்தம் கலைகளில் மிக்க ஆர்வமும், ஆழ்ந்த அறிவும், கல்வித் தராதரம் பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கலை பயில்வதில் மாணவர்களுக்கு மேலதிக நேரம் தேவைப்பட்டால் அதற்கும் உதவிக்கரம் நீட்டுகின்றனர். நமது பள்ளி மாணவர்கள் அனைத்துப் பள்ளிகளுக்கிடையிலான தமிழ்த்திறன் போட்டிகளான திருக்குறள், பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகளும் பெற்று வருகின்றனர். ஆண்டுக்கொரு முறை வரும் தைப்பொங்கல், நவராத்திரி, நத்தார் விழாக்களையும் புலம்பெயர் தமிழ் மாணவர்களும் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக இப்பள்ளி அவற்றைக் கொண்டாடி வருகிறது.

காலை ஒன்றுகூடலில், ஒவ்வொரு சனிக்கிழமையும் வகுப்பு ஒழுங்கு முறைப்படி மாணவர்கள் கலந்து கொண்டு, பேசுதல், பாடுதல், கதை சொல்லல், உரையாடுதல் மூலம் தமது பேச்சாற்றலை வளர்க்கின்றனர். நமது மொழி, பண்பாடு, விழுமியங்கள், கலை போன்றன நமது அரிய சொத்துகள் அன்றோ? அவற்றைக் காப்போம். 'எண்ணித் துணிக கருமம்' என்றார் வள்ளுவப் பெருந்தகை. துணிய வேண்டும் தளர்ச்சி இல்லாத, தொடர்ச்சியான ஊக்கம் வேண்டும். நமது பள்ளி வளர்ச்சிக்காக ஒன்றுபடுவோம்.! உழைப்போம்! வாழ்க தமிழ்மொழி! நன்றி!

**திருமதி தங்கேசு கெங்காதரன்** - தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாட்டில் தமிழ்ப்பள்ளிகளின் பங்கு

இன்று புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப்பள்ளிகள் இல்லாத நாடே இல்லை என்று கூறிவிடலாம். பழந்தமிழ் நாட்டில் பாண்டிய மன்னர்கள் தமிழ்மொழி அழிந்து விடாமல் இருக்க கழகங்கள் அமைத்துத் தமிழை வளர்த்தார்கள். அத்தகைய தமிழ்மொழியை புலம்பெயர்நாட்டிலும் வளர்க்க வேண்டும் என்பதற்காக நம் தமிழ் ஆர்வலர்கள் தமிழ்ப்பள்ளிகளை நிறுவி, நடாத்திக் கொணடு வருகிறார்கள். அப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் இங்குள்ள சிறார்களுக்கு ஏற்றதுபோல் தமிழ்க்கல்வியை ஊட்டி வருகின்றனர்.

தாயகத்தில் வாழும் ஒரு மாணவன் தமிழ்மொழியை அறிந்து, உணர்ந்து கற்பதைவிட புலம்பெயர் நாட்டில் வாழும் ஒரு மாணவன் தமிழ்மொழியை நம் தமிழரின் உண்மை வரலாறு, தமிழ் இலக்கிய வரலாற்றின் உண்மைத் தன்மை என்பனவற்றை அறிந்து உணர்ந்து கற்கிறான். அந்த வகையில் புலம்பெயர் நாட்டில் தமிழ்ப்பள்ளிகளின் பங்கு பெருமைக்குரியதாகவே காணப்படுகிறது. மற்றும் கிழமையில் ஒரு நாள் நடைபெறும் இப்பள்ளிக்குத் தமிழ் மாணவர்கள் மட்டுமல்லாது பெற்றோர்களும் ஒன்றுகூடி மகிழ்ந்து தமிழராய் ஒன்றிணைகிறார்கள்.

புலம்பெயர் நாட்டில் வாழும் சில தமிழர்கள் தமிழ்ப்பள்ளி என்றால் வியாபார நோக்கத்துடனேயே நடாத்தப்படுகின்றன என்ற தவறான பார்வையில் பார்க்கின்றனர். புலம்பெயர் நாட்டில் எந்த நிறுவனத்தை நடத்துவதென்றாலும் பணம் தேவை. இந்நாடுகளில் எவற்றுக்கெல்லாமோ பணத்தை வாரிவாரிக் கொடுப்பவர்கள் நம் உயிரினும் மேலான தமிழ்மொழியைக் கற்கத்தான் கணக்குப் பார்ப்பார்கள்.

எனவே எமது மொழி மட்டுமன்றி, எமது பண்பாடு, கலை, கலாச்சாரம் அழிந்துவிடாமல் இருக்க எம் மாணவச் செல்வங்கள் தமிழ்ப்பள்ளிக்குச் சென்று தமிழ்மொழியைக் கற்று நற்றமிழ் மாந்தனாக வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**திருமதி விஜியா மகேந்திரராஜா**
தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவத்தே பயிர் செய்

'பருவத்தே பயிர் செய்', 'இளமையிற் கல்' என்பது ஆன்றோர் வாக்கு இவையிரண்டுமே பொருள் பொதிந்த அறிவுரைகள். வயலை உழுது காலம் அறிந்து விதை விதைத்துப் பயிர் செய்யும் உழவன் நல்ல அறுவடையைப் பெறுகிறான். வயலை உழ வேண்டிய காலத்தில் அதைச் செய்யாமல் நல்ல அறுவடையை எதிர்பார்க்கலாமா?

இளமைக் காலத்திலேயே நல்ல கல்வி அறிவைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இளமைப் பருவமே கல்வியை மனதிற் பதித்துக் கொள்வதற்கு ஏற்ற காலம். மாணவர்களுக்கு தொல்லை மிக்க உலக வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், துயரங்கள், பொறுப்புகள் தோன்றாத காலம். துடிதுடிப்பும் உற்சாகமும் தலைதூக்கி நிற்கும்.

இதனை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாந்தனுடைய முக்கிய காலமாகிய இளமைப் பருவத்தில் மாணவர்கள் சரியாக வழி நடத்தப்பட்டால் வாழ்நாள் முழுவதும் மன அமைதியோடும் நிறைவோடும் வாழலாம். இளமையில் கற்கும் கல்வி, நல்ல பழக்கங்கள், ஒழுக்கம் என்பன ஒருவருடைய வாழ்வுக்கு வளம் சேர்க்கும். இதனால் தான் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா எனப் பழமொழியும் கூறி விட்டுச் சென்றனர் எம்முன்னோர்.

வாய்மை, கொல்லாமை, கள்ளாமை, ஊக்கமுடைமை, இன்னாசெய்யாமை, போன்ற நற்பண்புகளை ஒருவன் தன் இளமைப் பருவத்தில் வளர்த்துக் கொண்டால் சான்றோர்கள் பாராட்டும் நிலையை அடைவான். பயனுள்ள செயல்களைக் காலம் அறிந்து செய்வோர்க்கு வெற்றிப் பாதை திறக்கும். செய்யும் செயல்கள் சிறப்புற அமையும். அவர்கள் என்றும் உலகில் நிலைபெற வாழ்வார்கள்.

**திருமதி அமுதினி சிவபாலன்** - தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் நாட்டில் தமிழ்ப் பெண்கள்

ஒரு பெண் நடு இரவு 12..00 மணிக்கு கழுத்து நிறைய நகைகள் அணிந்து தனியாக, பயமின்றி உலா வருவாள்' எனின் அவள் வாழும் நாடு மிக உயர்ந்த அறம் கொண்டது என்றார் ஓர் அறிஞர். நானறிந்த வகையில் தமிழீழம் ஒன்றே, தனது பொற்காலம் எனப் போற்றப்பட்ட காலத்தில் மேற்கண்டவாறு காணப்பட்டது. உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட சட்டதிட்டம் அரணாக இருந்தாலும் ஆங்காங்கே பல கசப்பான நிகழ்வுகளும் நடந்து கொண்டேயிருக்கின்றன. அதாவது பெண்களின் நிலை இரண்டாந்தர மானுடமாகவே கருதப்பட்டு அவர்களின் வாழ்வு நடக்கிறது.

புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரை பெண்களின் நிலை மேலோட்டமாக வளமாகத் தெரிந்தாலும் இரட்டைச் சுமைகளைத் தாங்கும் தோள்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. பொருளாதாரத்தில் காலூன்ற இருந்தாலும் நாகரீகத்தின் உச்சியில் இருந்தாலும் ஆசிய மனப்பாங்கு, தாம் பெண்கள் எனும் அடிமைத்தன மனப்பாங்கு அவர்களை மேலோங்க விடுவதுமில்லை, பிற மேலாதிக்கம் கொண்ட பெண்களை உயர்வடைய விடுவதுமில்லை. புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்ப்பெண்களில் 90% ஆசிரியர்களாகவும் பிள்ளைகளைப் படிப்பில் உயர்வடையச் செய்யும் தாய்மாராகவும் உள்ளனர். 'பெண்களே நாட்டின் கண்கள்' எனக் கூறப்பட்டாலும் சில மாதர் ஐரோப்பிய நாகரிகத்தை பண்பாடாக மயங்கி அதன்படி நடப்பது வேதனையாகவும் இருக்கிறது.

உள்ளத்தில் இருந்து வெளிப்படும் மன இயல்பான பண்பாட்டில் மேலோங்கி, 'கண்டதே காட்சி கொண்டதே கோலமென' வாழ்ந்து மன அழுத்தத்தில் உழலாமல் எமது பண்பாடு, பாரம்பரியங்களை மனதிற் கொண்டு மன மகிழ்வுடன் 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையுடன் யாருக்கும் அஞ்சாமல் நிமிர்ந்த ஞானச் செருக்குடன் தெளிவாகப் பெண்கள் வாழ்வதே அறமுடைய மனிதரின் வேண்டுகோளாகும்.

**திருமதி உமா காந்தி**
தமிழ்மொழி ஆசிரியை

## தாய்மொழி பற்றிய சிந்தனை மாற்றம்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துமுன்தோன்றிய மூத்த மொழியாகிய தமிழ்மொழியைப் பேசும் பெருமைக்குரியவர்கள் நாம். நாங்கள் பிறந்த மண்ணை விட்டுப் பிரிந்து புலம்பெயர் நாடுகளில் குடியேறிய நாம் நம் இளம் சிறார்களுக்கு தமிழைக் கற்பித்து, அதனை அவர்கள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பெரும்பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். மேலை நாடுகளில் தமிழில் பேசுவது, தமிழ் கற்பது தேவையில்லை, பெருமையில்லை என்றிருந்த காலம் மாறி தமிழைக் கற்காத பிள்ளைகளும் தமிழைக் கற்பதற்கு வாய்ப்பு வழங்காத பெற்றோர்களும் தாம் விட்ட தவறை உணரும் அளவிற்கு எமது தமிழ்மொழி புலம்பெயர் நாடுகளில் முக்கியத்துவம் அடைந்துள்ளது.

மேலும் அது உயர்ச்சி அடையும் எனபதில் எதுவித ஐயமுமில்லை. தமிழ்மொழியில் சிறந்த பெறுபேறு கிடைக்கும்போது மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவுக்கு வாய்ப்புக் கூடுதல், தமிழ்மொழித் தேர்ச்சி, சில துறைகளில் வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை, தாயகத்துக்குச் சென்று தாம் கற்ற கல்வித்துறைகளில் சில வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை உறுதியாகச் சொல்லலாம். இவற்றை உணர்ந்து பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றுபட்டு உழைத்து எமது தமிழ்க்கல்வியை தொடர்வோம், பயன்பெறுவோம்.

**திருமதி கோமளா ஜீவன்**
தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழலையர் நிலை
மழலைகளுடன் ஆசிரியர்கள்



பாலர் நிலை
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர்தமிழ் 1
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர்தமிழ் 2
ஆசிரியர்களுடன் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளர் தமிழ் 3
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 4
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 5
ஆசிரியர்களுடன் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளர் தமிழ் 6
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 7
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 8
ஆசிரியர்களுடன் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளர் தமிழ் 9
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 10
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 11, 12
ஆசிரியர்களுடன் மாணவர்கள்



வளர் தமிழ் 12
ஆசிரியர்களுடன் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்மொழி ஆசிரியர்கள்



பரதநாட்டிய ஆசிரியரும் மாணவர்களும்



வயலின் ஆசிரியரும் மாணவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுரத்தட்டு ஆசிரியரும் மாணவர்களும்



வாய்ப்பாட்டு ஆசிரியரும் மாணவர்களும்



தமிழ்த்திறன் போட்டி, அதிதிறன் (1+) வளர்தமிழ் 10, 11 பரிசுகள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது பெற்றோர் பாதுகாவலர்களான
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை - பரிசளிப்பு விழா 2017



நவராத்திரி விழா - வயலின் இசை



நவராத்திரி விழா - வாய்ப்பாட்டு இசை



வளர் தமிழ் 12
நிறைவு பட்டமளிப்பு
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
நடாத்திய பட்டமளிப்பு விழாவில்
நமது மாணவி மாதங்கி உதயகுமார்



நவராத்திரி விழா
நடனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்வியாண்டு இறுதி (2016)
கடற்கரையில்

# மாணவர்களின் ஆக்கங்கள்




மழலையர் நிலை - வடிவங்கள்



பாலர் நிலை - பூந்தோட்டம்




வளர் தமிழ் 1 - கடற்கரை



வளர் தமிழ் 2 - கோடை காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வளர் தமிழ் 3 - வாழை மரம்**

பனை மரம்

பனை ஓர் புல்லினத் தாவரம் ஆகும். இவை இயற்கையாகவே வளர்கின்றன. இளம் பனைகள் "வடலி" எனப்படும். இவை கிளைகள் அற்றவை. பனைமரங்கள் அதிகமாக ஆசிய நாடுகளில் வளர்கின்றன. பனையின் பலன்கள் பல உள்ளன. உதாரணமாக பதநீரானது கருப்பட்டி, வெல்லம் எனவும், தும்பானது தூரிகை அலங்காரப் பொருட்களாகவும் பனை மரம் மரப்பொருட்களாகவும் உருவாக்கப்படுகின்றன. இவை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டமுடிகிறது.

திருஷ்யந்
வளர்தமிழ் 4

**வளர் தமிழ் 4 - பனைமரம் கட்டுரை**

வளர்தமிழ் 5 10.12.16

<u>கதை - சிங்கமும் மான்களும்</u>

ஓர் அடர்ந்த காடு. அந்த காட்டில் ஐந்து மான்கள் வாழ்ந்து வந்தன. அவை ஒவ்வொரு நாளும், தண்ணீர் அருந்துவதற்காக ஆற்றங்கரைக்குச் சென்று வந்தன. ஆனால், சிங்கம் ஒன்று அங்கே உள்ளது. அதனால், அவர்கள் தண்ணீர் அருந்தாமல், அஞ்சி ஓடிவிடுகின்றன.

ஒரு நாள், அந்த ஐந்து மான்களும் தண்ணீர் அருந்துவதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றன. அங்கே சிங்கமும் நின்றது. அது மான்களை துரத்தியது. சிங்கத்தை கண்டு எல்லா மான்களும் ஓடிவிட்டன. அவர்களுக்கு ஒற்றுமையில்லாததால், இரண்டு மான்கள் இறந்துவிட்டன.

அடுத்தநாள், மூன்று மான்கள் தண்ணீர் அருந்துவதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றன. சிங்கமும் வந்துவிட்டது. ஆனால், மான்கள் தப்பி ஓடவில்லை. மான்கள் ஒற்றுமையாக இருந்து தங்களது கொம்புகளால், சிங்கத்தை தாக்கியதால், சிங்கம் இறந்துவிட்டது. மான்கள் மகிழ்வுடன் நீர் அருந்தி விட்டுச் சென்றன. ஒற்றுமைதான் மகிழ்வுக்கு கரணியம்.

ஆக்கம்:
தரிணிஜா டார்வின்.
வளர்தமிழ் 5

**வளர் தமிழ் 5 - கதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு."
ஒற்றுமை இருந்தால் நாம் மிடுக்குடன் வாழலாம். ஒற்றுமையே பலம் என்கிறது இப்பழமொழி. ஆம் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் என்னைச்சூழ ஒற்றுமை இன்மைகளே தலைவிரித்தாடும் போது எப்படி எனக்கு ஒற்றுமை பற்றி எழுதத் தோன்றும்?

நாட்டுக்குநாடு, இனத்துக்குஇனம், மொழிக்குமொழி, மதத்திற்குமதம், கல்விக்குகல்வி, பொருளாதாரத்திற்கு பொருளாதாரம் என எங்கு பார்த்தாலும் பாகுபாடும் ஏற்றத் தாழ்வுகளும் போட்டி பொறாமைகளும் நிறைந்து காணப்படுகின்றன. எங்கே நாம் மகிழ்ச்சி கொள்ளக் கூடிய வகையில் ஒற்றுமை இருக்கிறது?

இதற்கெல்லாம் விடை கிடைக்காவிடினும் எதிர்கால மழலைகளுக்காவது ஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டிய கடமையுள்ளது. ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே ஒற்றுமையை எடுத்து விளக்கலாம் என ஆய்வுகள் கூறுகிறது. எனவே ஒரு குழந்தைக்கு தாய்தந்தையாகும் தம்பதிகள் இதை கருத்தில் கொண்டால் தொலைத்துக் கொண்டிருக்கும் ஒற்றுமைவலுப்பெற உதவுவதோடு இப்பிரபஞ்சத்தில் எல்லா உயிர்களும் ஒற்றுமையாய் வாழ வழிவகுக்கலாம்.

சர்மிகா — வளர்தமிழ் 6

**வளர் தமிழ் 6 - கட்டுரை**

## உரையாடல்

கீர்த்தனா: வணக்கம் இயலி!

இயலி: வணக்கம் கீர்த்தனா! எனது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வருவீர்களா?

கீர்த்தனா: மன்னிக்கவும் எனக்கு தமிழ் பள்ளிக்கூடம் இருக்கிறது.

இயலி: தமிழ்ப்பள்ளியா? ஏன் அங்கே போகிறாய்?

கீர்த்தனா: நான் எனது தாய்மொழியை கற்க விரும்புகிறேன்.

இயலி: ஆனால் தமிழ் பள்ளிக்கூடம் போக மிக சிரமம்!

கீர்த்தனா: ஆம் இயலி. ஆனால் நாம் தமிழைக் கற்காமல் தமிழராக இருந்தால் என்ன பயன்? அத்துடன் எமது கலாச்சாரம், பண்பாடு என்பவற்றையும் கற்றுக் கொள்கிறோம்.

இயலி: தமிழ்படிப்பதால் வேறு என்ன பயன் கிடைக்கப் போகிறது?

கீர்த்தனா: மிகவும் பழமையானமொழிகளில் ஒன்றான தமிழ்மொழியைக் கற்பதனால் பல அறிவான சிறந்த நூல்களைக் கற்கலாம்.

இயலி: அப்படியே, சனிக்கிழமையில் நான் வேறு கலைகள் படிக்கலாம்.

கீர்த்தனா: ஆம். ஆனால் பள்ளியில் வெவ்வேறு கலைகள் பழகலாம்: நடனம், இசை

இயலி: சரி. நானும் தமிழ்ப்பள்ளி வர முடிவுசெய்துள்ளேன். நாளை பள்ளியில் சந்திப்போம்.

கீர்த்தனா பாலச்சந்திரன்
வளர்தமிழ் 8

**வளர் தமிழ் 8 - உரையாடல்**

## உரையாடல்

"புலம் பெயர் நாட்டில் இல்லங்களில் குடும்ப உறுப்பினர்களுடன் தமிழ்மொழியில் உரையாட வேண்டும்."

(வேந்தன் தன் நண்பன் பாவலனை நீண்ட நாட்களுக்குப் பின் காண்கின்றான். பாவலன் தன் மகனுடன் வருகின்றான்.)

வேந்தன் :- வணக்கம் பாவலா! நலமாக உள்ளாயா?

பாவலன் :- வணக்கம் வேந்தா! நலமாக உள்ளேன்.

வேந்தன் :- இவன் உன் மகன் கண்ணன் தானே?

பாவலன் :- ஆம் வேந்தா.

வேந்தன் :- வணக்கம் கண்ணன் குட்டி!

கண்ணன் :- Hello uncle!

வேந்தன் :- பாவலா உன் மகன் தமிழ் மொழியில் உரையாடமாட்டானா?

பாவலன் :- இல்லை வேந்தா. புலம் பெயர் நாட்டில் தமிழ் மொழி எதற்கு?

வேந்தன் :- பாவலா நீ சொல்வது தவறு. தமிழ் எங்கள் தாய் மொழி. நீ உன் இல்லத்தில் தமிழில் உரையாடுவதில்லையா?

பாவலன் :- இல்லை. இங்கு பிறந்து வளரும் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் தானே பேசவேண்டும்.

வேந்தன் :- என்ன சொல்கிறாய் பாவலா?
"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"
நாம் இல்லங்களில் தமிழில் உரையாடாது போனால், வருங்காலத்தில் எங்கள் பிள்ளைகள் எவ்வாறு தமிழ்மொழி பேசுவார்கள்? நம் இனிமையான மொழி காணாமலே போய்விடுமே! இதைத்தானா நீ விரும்புகிறாய்?

பாவலன் :- இல்லை வேந்தா. அப்படிச் சொல்லாதே. நான் தவறு செய்து விட்டேன்.

வேந்தன் :- கவலைப் படாதே நண்பா. இதுவரை செய்த தவறை இனியும் செய்யாதே!

பாவலன் :- உண்மை தான் நண்பா. புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் இல்லங்களில் அவசியம் தமிழில் உரையாடவேண்டும். எங்கள் நாட்டின் பெருமைகளைப் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியில் எடுத்துரைக்க வேண்டும். என் இல்லத்தில் இனி திரும்பும் திசையெல்லாம் தமிழ் மணம் கமழும்.

வேந்தன் :- மிக்க மகிழ்ச்சி பாவலா. நான் சென்று வருகிறேன்.

-ஆதிஷா சிவபாலன்.
வளர்தமிழ் 7

**வளர் தமிழ் 7 - உரையாடல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலை துளிர் காலம்

இனிய இலை துளிர் காலம் கண்டேன்
பறவைகள் சிறகடிக்கக் கண்டேன்
மொட்டுகள் மெல்ல மெல்ல விரியக் கண்டேன்
சிட்டுக்கள் தேடி வரக் கண்டேன்

கதிரவன் கிழக்கில் உதித்த அழகென்ன
மலர்களில் அதன் கதிர் பட்ட அழகென்ன
மஞ்சள் சிவப்பு ஊதா பூக்களின் அழகென்ன
அதை வட்டமிடும் சின்னச் சிறார்களின் அழகென்ன

வண்ணத்துப் பூச்சிகள் வட்டமிட்டன
சின்ன வண்டுகள் ரீங்காரமிட்டன
ஆகா! இது என்ன அதிசயம் கண்டேன்
ஆகா! என்ன அழகு!

ஆக்கம்
டிலக்ஷனா
வளர்தமிழ் 9

**வளர் தமிழ் 9 - கவிதை**

## அன்பு

அன்பு என்னும் மூன்றெழுத்தில்தான் அகிலமே அடங்கும்.
அம்மா காட்டும் அன்பு அளவிட முடியுமா?
அப்பா காட்டும் அன்பு நிறைந்தச் சொற்களை மறக்க முடியுமா?
அழகு நிறைந்த காட்சிகளை அன்பு தான் காணச் செய்கிறது,
குஞ்சுகள் தாயின் அரவணைப்பில் பாடுவதும் கேட்கச் செய்கிறது
அன்பே சிவம் என்கிறது திருமந்திரம், உலகமே அன்பில் மயங்கினால்
பூமியில் வாழும் அனைவரும் மகிழ்வோமே!
ஏனெனில் அன்பிற்கு அடைக்கும்தாழ் இல்லையே!

கீர்த்திகா.மோ ஆண்டு 10

**வளர் தமிழ் 10 - கவிதை**

## நம்பிக்கை

உலகின் மூத்த குடிமகன் தமிழனே!
இன்று நாடின்றி தவிக்கும் இனமே...
ஆரியர் முதல் சிங்களவர் வரை
எம்மை எதிர்த்து நின்ற போதும்
அன்றிலிருந்து இன்று வரை
போரிட்டு உயிர் நீத்த மாவீரர்களே...
வீழ்ந்திருந்த தமிழ் நெஞ்சங்களுக்கு
மீண்டும் நம்பிக்கை கொடுக்க வந்தவரே...
மன்னவன் உறங்குகின்ற போதும்
கவலைப்படாதீர்கள் சகோதரர்களே...
இன்று இருள் சூழ்ந்த எம் தாயகத்திற்கு
ஓர் நாள் விடிவு வராமல் போய்விடுமா?

– சரணியன் தியாகலிங்கம்
வளர்தமிழ் 11 + 12

## அன்பு

ஒருவன் தன் அன்புக்காய்த் - தன் உயிரையும்
கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு இல்லை.
பிறரின் நன்மையையே நோக்கியவராய்த் - தன் விருப்பங்களையும்
விட்டுக் கொடுப்பதே உண்மையான அன்பின் கொடை

ஞாலத்தில் ஞானத்தின் புகழ்ச்சிப் பா அன்பு தான் – அன்பில்
ஓருயிர் மரத்தினைப் போல் அவன் மாந்தன் இல்லை
உலகத்தை உமதாக்கி உண்டு களித்தாலும் – உம் மனதில்
அன்பில்லையேல், உம் வாழ்வில் அர்த்தமும் இல்லை

ஏனெனில் அகிலம் அனைத்தையும் ஆளும் ஆண்டவரும் அன்பு-
உலக வாழ்வை புதுப்பிப்பதும் அன்பில்லையென்றால், வேறொன்றும் இல்லை

கிளெமென்ற் றைன்
வளர்தமிழ் 12

**வளர் தமிழ் 12 - கவிதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் மாணவர்களும் தாயகச் சுற்றுலாவும்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாம் குடும்பத்தோடு தாயகம் சென்றிருந்தோம். ஒரே குதூகலம் தான். விண்ணுந்து நிலையத்திற்கு எம்மைக் கூட்டிச் செல்வதற்காக வந்திருந்த எனது பெற்றோர்களைக் கட்டியணைத்து எனது பிள்ளைகள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். வீடு சென்று சேரும்வரை பலவற்றையும் பேசி மகிழ்ந்தனர். செல்லும் வழியில் காணப்பட்ட அறிவிப்புப் பலகைகளைத் தமிழில் வாசித்தது எனது பெற்றோருக்கு மிக வியப்பாக இருந்தது. புலம்பெயர் நாட்டிலும் தமிழ்மொழியைக் கற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பளித்துள்ளனர் என்பது மிகவும் வரவேற்கக்கூடிய விடயம்.

அன்று எம்மைப் பார்ப்பதற்காக உறவினர்கள் ஒன்று கூடினர். பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து விளையாடி மகிழ்ந்தனர். இரண்டு நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பேருந்தில் புறப்பட்டோம். செல்லும் வழியில் திருகோணமலையில் உள்ள கன்னியாய் வெந்நீரூற்றில் நீராடி மகிழ்ந்தோம். இராவணன் தனது தாய்க்கு இறுதிக் கிரியைகள் செய்வதற்காக இக்கிணறுகளை உருவாக்கினான் என்பது வரலாறு. அடுத்ததாக, திருக்கோணேசர இறைவனை வணங்கியபின் ஒல்லாத்தர் கட்டிய கோட்டையையும் இராவணன் பாறையையும் பார்த்தோம்.

நிலாவெளிக் கடற்கரையில் நல்ல பொழுதைக் கழித்தோம். யாழ்ப்பாணம் நோக்கிய எமது பயணம் தொடர்ந்தது. வானுயர்ந்த பனைமரங்கள் எம்மை வரவேற்பது போல காற்றில் ஆடிக்கொண்டிருந்தன. பிள்ளைகள் தாம் பாடநூலில் படித்த, படமாகப் பார்த்த பனைமரத்தை அடையாளம் கண்டு மகிழ்ந்தனர். வழியில் கண்ட பாழடைந்த வீடுகளும், கட்டடங்களும் மனதில் கவலையை உண்டாக்கின.

யாழ்ப்பாணத்தில் நாங்கள் பிறந்து வளர்ந்த எங்கள் வீடு எவருமற்றுப் பூட்டப்பட்டிருந்தது. துள்ளியோடி வரும் என் நாய்க்குட்டியைக் காணவில்லை. சோலையாகக் காட்சியளித்த எமது வீட்டுத் தோட்டம் காய்ந்து வாடியிருந்தது. இனிமையான பழைய நினைவுகள் மனதில் அலைமோதின. எனது பிள்ளைகளுக்கு வீட்டைச் சுற்றிக் காட்டினேன்.அருகில் இருந்த வயலுக்குச் சென்று எமது வைரவ கோவிலைக் காட்டி அக்கோவிலைப் பற்றிக் கூறினேன். இதமான காற்றும் குளக்கரையும் வயல்வெளியும் என்றுமில்லாத இன்பத்தை மனதிற்கு அளித்தது. கிணற்றில் தண்ணீர் அள்ளி எனது பிள்ளைகள் மகிழ்ந்தனர். தமிழ்ப்பள்ளியில் பாடநூலில் படித்தவற்றை நேரடியாகக் கண்டு நினைவுபடுத்தி மகிழ்ந்தனர்.

மறுநாள் எமது ஊரவர், உற்றார், உறவினர் எல்லோரையும் கண்டு மகிழ்ச்சியில் திளைத்தோம். அவர்களுடன் தமிழில் உரையாடுவதற்கு எனது பிள்ளைகள் தயங்கினர். அவர்கள் கூறுவது புரிந்தாலும் பிள்ளைகளுக்குத் தமிழில் சரளமாகப் பேச முடியவில்லை. என்ற உணர்வு ஏற்பட்டது. இன்றிலிருந்து எனது பிள்ளைகளுடன் எந்நேரமும் தமிழில் பேசவேண்டும் என மனதில் உறுதி எடுத்தேன்.

**திருமதி தருணி அகிலன்** - தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னணு வழியாகத் தமிழ்மொழி

உலகெங்கும் தற்போது வழக்கிலுள்ள 6000ற்கும் மேற்பட்ட மொழிகளில் 'உலக விளமபரப்டுத்தும் (World Blaze) என்ற இணையத்தளம் மிகப் பழமையான மொழிகள் எனப 10 மொழிகளை வரிசைப்படுத்தியுள்ளது. அதில் முதல் இடத்தில் இருப்பது எமது தமிழ் மொழியே ஆகும். இரண்டாவது இடத்தில் உள்ள சமஸ்கிருத மொழி பேச்சு வழக்கிலிருந்து அழிந்து கொண்டு போகிறது. ஆனால் கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளிற்கு முன்பே தோன்றியதாகக் கூறப்படுகின்ற தமிழ்மொழி இன்றும் உயிர்ப்புடன் இருப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று தொழில் நுட்ப வளர்ச்சியுடன் தமிழ்மொழியும் மின்னணு மொழியாக உருவெடுத்தமையே ஆகும்.

தொழில்நுட்ப வளர்ச்சி, பிறமொழி ஆதிக்கம் மற்றும் வெளிநாட்டுக் கலாச்சாரம் ஆகியவற்றால், உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களிடையே, எங்கே தமிழ்மொழி அழிந்துவிடுமோ? எனக் அஞ்சும் வேளையில், தமிழ்மொழி கணினியிலும் அலைபேசிகளிலும் (telephone, Ipad, facebook, email, viber) மின்னணு மொழியாக உருவெடுத்து மேன்மேலும் வளர்ச்சியடைந்து என்றைக்குமே அழிவில்லாதது என உறுதிப்பாட்டுடன் இருக்கிறது.

தொடக்கத்தில் தமிழ்மொழி மின்னணு மொழியாக அறிமுகப்படுத்தப்பட்ட போது மக்கள் அதை பெரிதாகப் பயன்படுத்தவில்லை. பின்னர் சமூக வலைத்தளங்களின் வரவால் பெருமளவில் பயன்படுத்தத் தொடங்கினர். ஆனால் தற்போது தமிழில் தகவல்களை வெளியிட்டால்தான், அது தமிழ் மக்களிடம் சென்று சேர்கிறது என்ற உண்மை அறிந்தபின் சமூக வலைத்தளங்களில் வேறு வழியின்றித் தமிழைப் பயன்படுத்தும் நிலைக்கு பெரும்பாலானோர் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கணினியில் வளர்ச்சி அடைந்தாலும் அலைபேசியில் தமிழைப் பயன்படுத்துவொரின் எண்ணிக்கை குறைவு. அலைபேசியில் தொழில்நுட்பப் பிரச்சினைகள், தமிழைப் பயன்படுத்த இயலாமை, மற்றும் விருப்பமின்மை போன்ற காரணங்களால் தமிழ்மொழி வளராமல் இருந்தது. ஆனால் சமூக வலைத்தளங்களில் தமிழ்மொழியின் பயன்பாடு கூடி வருவதால், பன்னாட்டு நிறுவனங்கள் தமது சந்தையை விரிவுபடுத்த அலைபேசியில் தமிழ்மொழியை அறிமுகம் செய்து வருகின்றன. முகநூலில் (facebook) தமிழைப் பயன்படுத்தத் தொடங்கிய பின் அவ்வலைத்தளம் தமிழ்மொழியைப் பயன்படுத்துவோருக்கு எவ்வாறு பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்ததோ, அவ்வாறே அலைபேசி நிறுவனங்களும் அதைச்சார்ந்த மென்பொருள் நிறுவனங்களும் தமிழ்மொழியைப் பயன்படுத்துவோருக்குப் பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும். தமிழை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல அலைபேசியைத் தமிழ்மொழியில் மாற்றுவது இன்றியமையாதது.

மேலும் தமிழ்மொழியின் பயன்பாடு அதிகரித்தால் புதிய கலைச் சொற்களை உருவாக்கவும் தமிழில் புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் இது பெரிய அளவில் உதவும். தமிழ்மொழியை மின்னணு மொழியில் அடுத்த தலைமுறையினரும் பயன்படுத்துவார்களாயின், தகவல் பரிமாற்றத்தில் தனித்துவத் தன்மையைப் பேணலாம். தற்போது தமிழ்மொழி மின்னணு தமிழாகப் வளர்ச்சி அடைந்துள்ளது. இதைத் தமிழர்கள் அனைவரும் முறையான வழிகளில் பயன்படுத்தினால், அழிந்துவரும் மொழிகளுடன் சேர்ந்து தமிழையும் அழியாது காப்பாற்றி அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு சேர்க்கலாம். வாழ்க தமிழ்மொழி! வளர்க தமிழ்மொழி!

**திருமதி தேவகி லீலாகிருஷ்ணா**
தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# <u>நூல் பல கற்போம்</u>

சிறியவர் முதல் பெரியவர் வரை, எந்த வயதினர் ஆனாலும் நூல்களைக் கற்பது அகத்தியமான ஒன்றாகும். நாம் நாள்தோறும் சுவாசிக்கின்றோம். அதே போல் நாள்தோறும் எதையாவது வாசிக்க வேண்டும். சுவாசிப்பது எமது இயல்பு. வாசிப்பதையும் எமது இயல்பாக்க வேண்டும். சின்னஞ்சிறிய பறவைகள் ஒரு கூட்டைக் கட்ட வேண்டுமாயின் சிறுகுச்சி, இலை, சருகு, தும்பு, பஞ்சு போன்ற பொருட்களைத் தேடித்தேடிச் சேகரித்து அழகாகவும் அமைவாகவும் ஒரு கூட்டை உருவாக்கி தமது வாழ்வை அமைத்துக் கொள்கின்றன. அது போல மாந்தர்களாகிய நாமும் நல்ல நல்ல நூல்களைத் தேடி வாசிக்க வேண்டும். ஒவ்வொரு நூலையும் வாசிக்கும்போது ஒரு நண்பனோ அறிவாளியோ கிடைத்தது போல், எமக்கு அறிவும் ஆற்றலும் ஆக்கமும் பெருகும். நாம் செய்யும் தவறுகளும்கூடத் திருத்தப்படுகின்றன. நாம் நனனெறிப்படுத்தப்படுகின்றோம். நல்லொழுக்கங்களும் அறிவுறுத்தப்படுகின்றன. அனைத்துக் காலங்களிலும் உற்ற துணையாக இருப்பதும் நல்ல பயன்களைத் தருவதும் நாம் தேடி வாசிக்கும் நல்ல நூல்களே. 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்பது பழமொழி.

*அதே போல செந்நாப்புலவராகிய வள்ளுவரும்,*

***'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்***
***கற்றனைத தூறும் அறிவு'***

என கற்கக் கற்க அறிவு பெருகும். நல்ல நூல்களை நாமும் கற்போம். வாழ்வில் நற்பயன் பெறுவோம்.

**திருமதி வசந்தாதேவி சிவானந்தவேல்** - தமிழ்மொழி ஆசிரியை

# <u>அன்பால் இணைவோம்</u>

**" அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்" என்றார் வள்ளுவப் பெருந்தகை.**

அன்பு என்ற ஒரு சொல்லுக்கு சக்தி மிகப் பெரியது. இது உள்ளத்தில் இருந்து வெளிப்படும் ஓர் இனிய உணர்வு. உறவுகளுக்கிடையே ஏற்படும் இந்த அன்பானது காதல், பாசம், கருணை, பக்தி என்று பல பெயர்களால் அழைக்கப்படுவது எமது மொழியின் சிறப்பாகும். சிரிப்பு, அழுகை, கோபம் போன்ற பல உணர்வுகளால் அன்பு வெளிப்படுகிறது. ஒரு துளி கண்ணீரால் ஒருவர் தனது அன்பை வெளிப்படுத்தலாம்.

தாயின் அன்பில் தொடங்கி, தந்தை, சகோதரர், உறவினர், நண்பர் என்று பல உறவுகளால் இணைக்கப்பட்டு தான் மாந்தர் வாழ்வு. மாந்தர் மட்டுமல்ல, விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிரினங்களும் அன்பைத் தமக்குள் பகிர்ந்து ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதைக் காணலாம். தமிழீழத்தில் போரினால் பாதிக்கப்பட்ட எத்தனையோ நம் உறவுகள் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கித் தவிக்கின்றன.

அந்த உறவுகளுக்கு அன்புக்கரம் நீட்டி, அவர்களுக்கும் இந்த உலகில் ஒரு மகிழ்ச்சியான எதிர்கால வாழ்க்கையைக் கொடுத்து நாமும் மகிழ்ச்சியாக மனநிறைவுடன் வாழ்வோம். புலம்பெயர் நாட்டு இளந்தலைமுறையினரும் தமது கல்வியை முடித்தபின் எமது மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட நல்ல திட்டத்தை வகுத்து உதவி செய்வதற்கான மனப்பக்குவத்தை வளர்க்க வேண்டும்.

**திருமதி வசுமதி ஆதவன்** - தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாட்டில் தமிழ் கற்பிப்பதில் பெற்றோரின் பங்கு

***"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்***
***இனிதாவது எங்கும் காணோம்"***

என்று பாடினான் பாரதி. செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ் எனப் போற்றப்படுகின்ற பெருமைக்கும் புகழுக்குமரிய தனிச்சிறப்புடைய மொழி எம் தாய்மொழியான தமிழ்மொழி. எந்த மொழி ஓர் இனத்தை அடையாளம் காட்டுகிறதோ அந்த மொழியே அவ்வினத்தின் தாய்மொழியாகும்.

புலம்பெயர் நாட்டில் வாழும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தாய்மொழியான தமிழைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதில் பெற்றோர்களின் பங்கு நிறையவே உள்ளது. தாயகத்தில் இருக்கும் தமது உறவுகளுடன் தகவல் பரிமாற்றம் செய்வதற்கு ஓர் ஊடகமாக இருப்பது மொழி. தமது உறவுகளையும் அவர்களுடனான தொடர்புகளையும் தக்க வைத்துக் கொள்வதற்கு தமிழ்மொழியை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி தமிழ் கற்கத் தூண்டுகிறார்கள். அவ்வாறான தமிழ்ப் பற்றும் மொழி ஆர்வமும் கொண்ட பெற்றோர்கள் வாழ்வதாலேயே புலம்பெயர் நாட்டில் எண்ணற்ற தமிழ்ப்பள்ளிகள் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்மொழியின் எதிர்காலம் எம் மாணவச் செல்வங்களிலேயே தங்கியுள்ளது. அதற்காகப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வழிநடத்தி, தமிழ்மொழி தொடர்நது வளர்ந்து செழித்து வளர உதவ வேண்டும்.

**திருமதி புஷ்பா இராஜேந்திரன்** - தமிழ்மொழி ஆசிரியை

# பணிவும் அடக்கமும்

மாந்தனுக்கு அடக்கம் என்பது ஒரு சிறந்த பண்பாக இருக்க வேண்டும். நாம் சிறு வயதில் இருந்தே நற்பண்புகளான அடக்கத்தையும் பணிவாக இருப்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். வானத்தில் உள்ள சிறிய முகிலானது மகத்தான கதிரவனைச் சில வேளைகளில் மறைத்து விடுகிறது. அது போலத்தான் ஆணவம், அடக்கமின்மை மாந்தனின் நற்பண்புகளை மறைத்து விடுகிறது. அடக்கம் பொதுநலத்தின் தேவாலயம். ஆணவம் சுயநலத்தின் பாழ்மண்டபம் என்பர் சான்றோர்.

ஒருவனது வாழ்வில் பணிவுடைமை ஆணிவேராகச் செயற்பட்டு மாந்த குலத்திற்கு நற்பண்புகளைக் கொடுக்கிறது. கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது என்கிறார் மகாவீரர் பணிவு வெற்றியைப் பெறுகிறது. ஆணவம் நிமிர்ந்து நின்று அடிவாங்குகிறது. மாந்தனிடமிருந்து ஆணவம் நீங்கும்போது மகிழ்ச்சி வெளிப்படுகிறது. மாணவர்களுக்கு ஏட்டுக்கல்வி மட்டுமல்ல நல்ல பழக்கவழக்கங்களும்தான் அவர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

ஒருவரின் அடக்கமுடைமை அவரை இப்பிறவியில் மட்டுமல்ல ஏழு பிறவிகளிலும் காத்து நிற்கிறது என்கிறார் வள்ளுவர். எனவே பணிவு, அடக்கம் என்பன ஒருவரின் வாழ்க்கையில் வெற்றிப்படிகளாக அமைகின்றன.

**திருமதி சுதர்சினி கிரிதரன்** - தமிழ்மொழி ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளி

கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளியின் தமிழ்மொழிப் பாடத்திட்டம் - தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வளர்தமிழ்ப் பாடநூல்களைப் பின்பற்றிக் கற்பிக்கப்படுகிறது.

## கற்பிக்கும் பாடங்கள்

தமிழ்மொழி – Tamil Language
(மழலையர் நிலை – வளர்தமிழ் 12 வரை)

தமிழ்மொழி – GCE(O/L), (A/L)
(Cambridge University Exam)

பரதநாட்டியம் - Dance

வாய்ப்பாட்டு - Vocal

வயலின் - Violin

சுரத்தட்டு - Keyboard

**அனைத்துப் பாடங்களும் திறமையும் பட்டறிவும் கல்வித் தகைமையும் அர்ப்பணிப்பும் உள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.**

**பள்ளி நடைபெறும் நாள் - தவணை நாட்களில், சனிக்கிழமைகளில் காலை 8.45 – பிறபகல் 1.00 மணி வரை நடைபெறுகிறது.**

**பள்ளி முகவரி –** **கவுன்சுலோ முத்தமிழ்ப் பள்ளி**
Featherstone High school
11, Montague Waye,
Southall,
Middlsex UB2 5HF

தொடர்புகளுக்கு – 07484713413, 07837045606, 07723923249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed @ JR print Tel: 020 8503 6643